2014 ஜூலை 30]

அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், புதிதாக வட்டங்களை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசால் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில் 9 வட்டங்கள், 2013-2014 ஆம் நிதியாண்டில் 25 வட்டங்கள் என, மொத்தம் 34 புதிய வட்டங்களை உருவாக்கி, வரலாறு படைத்திருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம், தாயுருவ தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

282—

சீரமைத்தல்

***8809—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைக் கட்டடத்தினைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளைச் சீரமைக்க, 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு நிதியிலிருந்து, ரூ.5.50 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்தமிழ்நாட்டின் அரசியல் வசந்தமே! அரசியல் புழுதிகளை அகற்றிய புயல் காற்றே! (மேசையைத் தட்டும் ஒலி) தன் தோளில் தமிழகத்தைத் தாங்குகிற இதயமே! தன் திறமையால் தமிழ் மண்ணைத் தழைத்தோங்க வைக்கும் சிகரமே! புறநானூற்றுப் புரட்சியே! புதுமைகளின் எழுச்சியே! (மேசையைத் தட்டும் ஒலி) கணக்குப் போட்டு, அன்னைத் தமிழகத்தைத் தட்டியெழுப்புகிற கண் துஞ்சா உழைப்பே! வாரிக் கொடுக்கிற வள்ளல் மனமே! வற்றாத அறிவூற்றே! மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி மகிழ்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட வள்ளியூரில் இருக்கும் பள்ளிக் கட்டடத்தைச் சீரமைக்க நிதி ஒதுக்கி, பணிகளை முடித்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள சமூகரெங்கபுரம், கூடங்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கும் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பழவூர் மேல்நிலைப் பள்ளியில் 2010 ஆம் ஆண்டு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் சுமார் 82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், ஏதோ காரணத்தினால் அந்தப் பணிகள் இன்றுவரை நிறைவு பெறாமல் இருக்கின்றன. அதற்குரிய விளக்கம் கேட்டு பொதுப் பணித் துறை மூலமாக கடிதம் எழுதியதற்கு, பணியைச் செய்த ஒப்பந்தக்காரர் வழக்கு

தொடர்ந்திருப்பதால், அந்தப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, அந்தப் பணிகளைச் செய்து, உடனடியாக வகுப்பறைகளைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகரெங்கபுரம் மேல்நிலைப் பள்ளி, கூடங்குளம் மற்றும் செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பழவூர் பள்ளியில் நபார்டு வங்கித் திட்டத்தின்மூலம் கட்டப்பட்ட கட்டடப் பணிகள் நிலுவையில் உள்ளன என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அந்தப் பணிகளையும் ஆய்வு செய்து, அங்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்தால், உடனடியாக அந்தக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

283—

மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டுதல்

***27709—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—